# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2053 ● ஜூன் 4, 2022 Weekly E-paper ● June 4, 2022



# வாளும் கேடயமும்!

சுப.வீரபாண்டியன்

## ஒப்புதல் தர வேண்டும் ஆளுநர் !

தலையங்கம்

## அத்துமீறும் ஆளுநர்!

பிரின்ஸ் கஜேந்திரபாபு

## இதழியல் முன்னோடி பெரியார்

நூல் அறிமுகம் - வெற்றிச்செல்வன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2053 ● ஜூன் 4, 2022 Weekly E-paper ● June 4, 2022


# வாளும் கேடயமும்!

சுப.வீரபாண்டியன்



கடந்த வாரம் கோவை சென்றிருந்தபோது, நானும், தோழர்கள் உமாபதி, சிங்கராயர் ஆகியோரும், மருத்துவமனையிலிருந்த கழகத்தின் மூத்த உறுப்பினர்களில் ஒருவரான விடுதலை விரும்பி அவர்களைச் சென்று கண்டு வந்தோம். அந்த நிமிடங்கள் மிக நெகிழ்வானவை. அது குறித்துத் தோழர்கள் இருவருமே தத்தம் முகநூலில் பதிவு செய்துள்ளனர். அதனைத் தாண்டி, அன்று அவர் மொழி தொடர்பாகச் சொன்ன ஒரு செய்தி மிக முதன்மையானது. அது நம் சிந்தனைக்கு உரியதாக இருந்தது. அது குறித்துப் பேசுவதற்கு முன்பு, எனக்கு நேர்ந்த ஓர் அனுபவத்திலிருந்து, இன்னொரு செய்தியை இங்கு முதலில் பதிவிட வேண்டும் என்று கருதுகின்றேன்.

சில நாள்களுக்கு முன், ஒன்றிய அரசின் நிறுவனத்தில் நடைபெற்ற அரசு விழா ஒன்றில் உரையாற்ற நான் அழைக்கப்பட்டிருந்தேன். விழா முடிந்து, அன்று மதிய உணவை நானும், அந்த நிறுவனத்தின் தலைமை அதிகாரியும் அவருடைய அறையில் எடுத்துக்கொண்டோம். அவர் உத்திரப்பிரதேசத்துக்காரர். அவருக்குத் தமிழ் சுத்தமாகத் தெரியவில்லை. எனக்கு இந்தி தெரியாது. எனவே இருவரும், இருவருக்கும் தெரிந்த அரைகுறை ஆங்கிலத்தில் உரையாடினோம். நான் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவன் என்பதைத் தவிர, என் அரசியல் பின்புலம் எதுவும் அவருக்குத் தெரியவில்லை. ஆகவே, மனம் திறந்து சில செய்திகளை என்னிடம் பேசினார். அந்த உரையாடல் மிகத் தேவையானது என்பதால், அதனை உரையாடல் வடிவிலேயே கீழே தருகின்றேன். உரையாடலை நான் இப்படித் தொடங்கினேன்.

**“இரண்டும் நமக்கு அந்நிய மொழிகள்தானே, அவற்றுள் எது இருந்தால் என்ன என்று சிலர் கேட்கின்றனர். அப்படியில்லை. ஆங்கிலம் நமக்குப் பயன்படுகிறது. இந்தி நம்மை அடிமைப்படுத்துகிறது! எனவே இருமொழிக் கொள்கை என்பது நம்மை வடநாட்டினருக்கு அடிமை ஆகாமல் காப்பாற்றும் என்பது உண்மை!”**

‘நீங்கள் இங்கு வந்து எவ்வளவு நாளாயிற்று?”

“பத்து மாதங்கள் ஓடிவிட்டன”

“அப்படியா, இவ்வளவு நாளாகியும் ஏன் நீங்கள் தமிழ் கற்றுக் கொள்ளவில்லை?”

“நான் எப்போது மாற்றல் வாங்கிக்கொண்டு போகலாம் என்று காத்திருக்கிறேன். நீங்கள் வேறு...”

“ஏன் அப்படி? தமிழ்நாடு பிடிக்கவில்லையா?”

“இது நல்ல ஸ்டேட்தான். எல்லோரும் நன்றாகப் பழகுகிறார்கள். பருவநிலையும் நன்றாகவே உள்ளது”

“பிறகு என்ன?”

“மொழிப் பிரச்சினைதான் சார். இங்கு யாருக்குமே இந்தி தெரியவில்லை. தமிழ்நாட்டைத் தவிர இந்தியாவில் வேறு எங்கு சென்றாலும், இந்தியை வைத்து நாள்களை நகர்த்திவிட முடியும்”

“கேரளாவில்...?’

“அங்கும் கொஞ்சம் சிரமம்தான். ஆனாலும் தமிழ்நாடு அளவிற்கு இல்லை. அங்கே அலுவலகத்தில் பலரும் இந்தி பேசுவார்கள். இங்குதான், அலுவலகம், வீடு, கடைவீதி எங்கு சென்றாலும் இந்தி பயன்படுவதே இல்லை. யாருக்குமே இந்தி தெரியவில்லை”

இதற்குப் பிறகு அவர் சொன்ன செய்திதான் மிகுந்த கவனத்திற்குரியது. அவர் சொன்னார் -

“வேறொன்றுமில்லை சார், இங்கு பலருக்கும் ஓரளவு ஆங்கிலம் தெரிந்துள்ளது. அதனால் இந்தி வேண்டுமென்ற எண்ணமே இல்லை. ஆங்கிலம் போய்விட்டால், பிறகு மெல்ல மெல்ல எல்லோரும் இந்திக்கு வந்துவிடுவார்கள்.”

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

**முன் பக்கத் தொடர்ச்சி...**

பளிச்சென்று ஓர் உண்மை எனக்குள் பட்டுத் தெறித்தது!

அய்யாவும், அண்ணாவும், கலைஞரும் எவ்வளவு தொலைநோக்குப் பார்வை உள்ளவர்கள் என்பது புரிந்தது. 'வேலை செய்பவர்களிடம் கூட ஆங்கிலத்தில் உரையாடுங்கள்' என்று அய்யாவும், தனியாக 1968இல் ஒருநாள் சிறப்புச் சட்டமன்றத்தைக் கூட்டி, இருமொழிக் கொள்கையை வலியுறுத்தித் தீர்மானமாக நிறைவேற்றிய அண்ணாவும், தமிழுக்கு மாற்றாக அன்றி, இந்திக்கு எதிராகவே ஆங்கிலத்தை நிறுத்தியுள்ளனர் என்பது தெளிவாகப் புரிந்தது.

தாய்மொழி நமக்கு வாளாக இருக்கலாம். ஆனால் ஆங்கிலமே நமக்குக் கேடயமாக இருக்கிறது.

இரண்டும் நமக்கு அந்நிய மொழிகள்தானே, அவற்றுள் எது இருந்தால் என்ன என்று சிலர் கேட்கின்றனர். அப்படியில்லை. ஆங்கிலம் நமக்குப் பயன்படுகிறது. இந்தி நம்மை அடிமைப்படுத்துகிறது! எனவே இருமொழிக் கொள்கை என்பது நம்மை வடநாட்டினருக்கு அடிமை ஆகாமல் காப்பாற்றும் என்பது உண்மை!

இதன் தொடர்ச்சியாகவே, அண்ணன் விடுதலை விரும்பி சொன்ன கருத்தை நான் பார்க்கிறேன். அவருடைய நீண்ட அரசியல் அனுபவத்திலிருந்து அக்கருத்தை அவர் பெற்றிருக்கலாம். அவர் சொன்னார்

– "கர்நாடகம், கேரளம் போன்ற அண்டை மாநிலங்களோடு நமக்குச் சில சிக்கல்கள் இருக்கலாம். அவற்றைப் பேசித் தீர்க்க வேண்டுமேயன்றி, அவர்களைப் பகைத்துக் கொள்ள வேண்டியதில்லை. இணக்கமாகப் போவதே நல்லது. அதே போல, தமிழிலிருந்து பிறந்த கன்னடம், தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிகளையும் நாம் வெறுக்க வேண்டியதில்லை. தென்னாடு ஒற்றுமையாக இருந்தால்தான், வடநாட்டு ஆதிக்கத்தை



எதிர்கொள்ள முடியும்" என்றார். சட்டென்று எனக்குப் பாரதிதாசன் பாடல் வரிகள் நினைவுக்கு வந்தன.

"தெலுங்கு நாடு செப்பு கேரளம்

கன்னடம் துளுவம் என்னும் நாடுகள்

அனைத்தும் புதுப்பெயர் ஆமென அறிக

எல்லாம் பழந்தமிழ் நாடென இயம்புக"

என்று பாடும் புரட்சிக் கவிஞர், மேலும் இரண்டு வரிகளையும் இணைத்துச் சொல்கின்றார்,

"பிறர்கண்டு அஞ்சும்உன் பெரியபட் டாளத்தை

அறுத்துக் குறுக்குதல் அறியாமை அன்றோ?

ஏன்உன் இனத்தை எதிரிக் காக்கி

ஊனத்தை நாட்டுக்கு உண்டாக்கு கின்றாய்?"

என்றும் அவரே கேட்கின்றார்.

கவனமாயிருப்போம் தமிழர்களே, நமக்கு வாளும் வேண்டும், கேடயமும் வேண்டும்!

●

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## ஒப்புதல் தர வேண்டும் ஆளுநர் !

மக்கள் தங்கள் வாக்குகளால் நேரடியாகச் சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுத்து, முதலமைச்சராகப் பொறுப்பேற்றவர், முதல்வர் ஸ்டாலின் அவர்கள்.

ஆளுநர் என்பவர் ஒன்றிய அரசால் நியமனம் செய்யப்படுபவரே அன்றி, மக்களுக்கும் அவருக்கும் எந்தவொரு தொடர்பும் இல்லை.

முதல்வர் அரசின் அதிகாரத்திற்கு உரியவர். ஆளுநரின் வேலை கையெழுத்திட்டு ஒப்புதல் அளிப்பது, அவ்வளவுதான்.

தமிழ்நாடு சட்டமன்றத்தில் விவாதித்து, அமைச்சரவையின் ஒப்புதலுடன் ஆளுநருக்கு அனுப்பப்படும் சட்ட முன்வடிவுக்குக் கையெழுத்திட்டு, ஒப்புதல் தருவது மட்டுமே ஆளுநரின் வேலை.

மாறாகக் கிடப்பில் போட்டு நெடிது காலம் தாழ்த்துவதோ, மறுப்பதோ அல்லது குடியரசுத் தலைவருக்குச் சட்ட முன்வடிவுகளை அனுப்புவதோ ஆளுநரின் வேலை இல்லை என்று பேரறிவாளன் வழக்கில் உச்ச நீதிமன்றம் கூறியிருக்கிறது.

தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, ஆளுநர் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்ட .....

# தமிழ்நாடு சித்த மருத்துவப் பல்கலைக்கழகச் சட்ட முன்வடிவு, 2022,

# தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச் ) சட்ட முன்வடிவு, 1983,

# தமிழ்நாடு அடுக்குமாடிக் குடியிருப்பு உரிமைச் சட்ட முன்வடிவு, 2022,

# தமிழ்நாடு பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு, 2022 என்று 21 சட்ட முன்வடிவுகள் ஆளுநர் அலுவலகத்தில், ஆளுநர் கையெழுத்திடாமல் கிடப்பில் போடப்பட்டு இருக்கின்றன.

02-05-2022 அன்று கிண்டி ஆளுநர் மளிகைக்குச் சென்று, ஆளுநர் என்.ஆர்.ரவியைச் சந்தித்தார் முதல்வர்.

அப்போது அரசியல் சாசனத்தின் உணர்வையும், தமிழக மக்களின் விருப்பத்தையும் நிலை நிறுத்தும் வகையில், ஆளுநர் மாளிகையில் நிலுவையில் இருக்கும் சட்ட முன்வடிவுகளுக்கு விரைந்து ஒப்புதல் அளிக்க வேண்டுமென ஆளுநரிடம், முதல்வர் வேண்டிக் கொண்டார் என்று அரசுத் தரப்பு அறிக்கை தெரிவிக்கிறது.

தொடர்ந்து மக்களுக்கான நலத்திட்டப் பணிகளை முன்னெடுத்து வரும் முதல்வருக்கு, ஆளுநரும் துணை நிற்பது அவரின் கடமை.

எனவே முதல்வரின் வேண்டுகோளை ஏற்று, ஆளுநர் தன்னிடம் இருக்கும் 21 சட்ட முன்வடிவுகளுக்கும் விரைவில் ஒப்புதல் தருவார் என்று நம்புகிறோம்.

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

ஆசிரியர் குழு:
உதயகுமார்
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120. என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை– 600 024,

தொலைபேசி: 044-2472 6408

# அத்துமீறும் ஆளுநர்!

**தோழர் பிரின்ஸ் கஜேந்திரபாபு** - பொதுச் செயலாளர், பொதுப் பள்ளிக்கான மாநில மேடை

**பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில், தேசியக் கல்விக் கொள்கை 2020அய் முழுமையாகப் படிக்காததால் அதைப் பலர் எதிர்க்கிறார்கள் என்று தமிழக ஆளுநர் பேசி இருக்கிறார். ஆளுநரின் இந்தப் பேச்சைப் பற்றிய உங்கள் கருத்து.**



பிரின்ஸ் கஜேந்திரபாபு

ஆளுநர், தான் தமிழ்நாடு என்கிற மாநிலத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்று இருக்கிறோம் என்ற நிலையில் தமிழகத்திற்கு வரவில்லை. நாக்பூரைத் தலைமையிடமாகக் கொண்டு, ஆர் எஸ் எஸ் வழிகாட்டுதலில் உருவாக்கப்பட்டு, கல்விக் கொள்கை என்ற பெயரில் அறிமுகப் படுத்தப்பட்டிருக்கும் ஒற்றைப் பண்பாட்டுத் தேசியத்தைக் கட்டமைக்கும் ஆவணமான தேசியக் கல்விக் கொள்கை 2020அய்ப் பிரச்சாரம் செய்பவராக கருதிக்கொண்டு, செயல்படுவதற்காக வந்து அதை மட்டுமே செய்துகொண்டிருக்கிறார்.

அரசமைப்புச் சட்டம் அவருக்குக் கொடுத்திருக்கும் பணி என்பது, சட்டப்பேரவையின் அங்கமாக இருக்கும் ஒரு ஆளுநர், சட்டப்பேரவை நிறைவேற்றும் சட்ட முன்வடிவு அரசமைப்புச் சட்டத்தின்பால் இருக்கிறதா என்று பார்த்து, அதற்கு ஒப்புதல் கொடுப்பது.

முதலமைச்சர் தலைமையில் இருக்கிற அமைச்சரவைதான் கொள்கை முடிவு எடுக்க முடியுமே தவிர, கொள்கை முடிவை ஆளுநர் எடுக்க முடியாது. இந்தக் கொள்கை நல்லது இந்தக் கொள்கை தவறானது என்று பிரச்சாரம் செய்ய ஆளுநருக்கு உரிமை இல்லை.

பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவைப் பிரச்சார மேடையாக மாற்றுவது மரபு மீறும் செயல். பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்று அமர்ந்திருக்கும் மாணவர்களிடையே ஒரு கொள்கை நல்லது என்று சொன்னால் அதன் தீய அம்சங்கள் என்ன என்று சொல்லக்கூடிய வாய்ப்பு இணைவேந்தராக இருக்கக் கூடிய உயர் கல்வி அமைச்சருக்கு இருக்கிறது. ஆளுநர் பேசிய பிறகு அமைச்சர் பேச முடியாது என்பது, பதில் பேச முடியாது என்பதல்ல. ஆளுநருக்கு மரபைக் காக்கத் தெரியவில்லை. ஒரு மாநிலத்தின் அமைச்சரும் மரபைக் காக்காமல் போய்விடக்கூடாது என்ற பெருந்தன்மையோடு அமைச்சர் நடந்து கொள்கிறார். எனவே இனி மாணவர்களே எழுந்து குரல் கொடுக்கும் சூழல் உருவாகலாம்.



ஆளுநர் தேசியக் கல்விக் கொள்கை ஆவணத்தை முழுமையாகப் படித்து இருப்பாரேயானால், ஒரு சாதாரண மனிதனாக நான் கேட்கிறேன், என்னுடன் விவாதிக்க ஆளுநர் தயாரா?

**அண்மையில் நடந்த பத்திரிகையாளர் சந்திப்பில் பாஜக தலைவர் அண்ணாமலை அவர்கள் இந்தியாவிலேயே தமிழக மாணவர்களுக்குத்தான் “கிரகிக்கும் தன்மை” குறைவாக இருக்கிறது என்றும் இங்கு கல்வியில் தரம் இல்லை என்றும் சொல்லியிருப்பது பற்றி தங்களுடைய கருத்து**

அண்ணாமலை ஒரு முன்னாள் ஐபிஎஸ் அதிகாரி. அதேபோல் ஆளுநர் திரு ரவி அவர்களும் முன்னாள் ஐபிஎஸ் அதிகாரி. இரண்டு பேரும் யுபிஎஸ்சி தேர்வுக்காகப் படித்தவர்கள். அரசமைப்புச் சட்டத்தை நாடி நரம்புகளில் ஏற்றுக்கொண்டவர்கள் அல்ல. இந்திய அரசமைப்புச் சட்டம் இயற்றப்பட்ட போது நடந்த விவாதங்கள், அந்த விவாதங்களுக்குப் பின்னால் இருந்த இந்தியாவைப் பற்றிய கனவு, இவை எதுவுமே இந்த இரண்டு முன்னாள் ஐபிஎஸ் அதிகாரிகளுக்குத் தெரியாது.

திரு.அண்ணாமலை சொல்லியிருப்பது நூற்றுக்கு நூறு உண்மை. தமிழக மாணவர்களுக்கு நிச்சயமாக ஆர்.எஸ்.எஸினுடைய சனாதனக் கோட்பாட்டைக் கிரகிக்க இயலாது. இங்கு அநீதிக்கு எதிரான ஒவ்வாமை இருக்கிறது. சமத்துவமின்மைக்கு எதிரான ஒவ்வாமை இருக்கிறது. தமிழகத்து மாணவர்களுக்கு இருக்கிற சமத்துவப் புரிதல் திரு. அண்ணாமலை அவர்களுக்கு இல்லை. எனவே அவர் விரும்புவது போல் மாணவர்கள் கற்க வேண்டும் என்று அவர் எதிர்பார்ப்பது நியாயமில்லை.

**கல்வி உரிமைக்காக, திராவிட இயக்கம் ஒரு நூற்றாண்டாகப் போராடி வருகிறது. அதன் தொடர்ச்சியாக மாநிலப் பட்டியலுக்குக் கல்வி என்ற இலக்கை நோக்கி நாம் எப்படிப் பயணிக்கிறோம்?**

முதலாளித்துவம் தன்னுடைய இலாபத்திற்காக அரசை இயக்குவது என்பது காலந்தோறும் நடந்துவரும் சூழ்ச்சிதான். ஒவ்வொரு காலகட்டத்திலும் மக்கள் வீதியில் இறங்கிப் போராடினார்கள். தந்தை பெரியார் காமராஜரை ஆட்சியில் அமர்த்தி விட்டு, அவரது ஆட்சிக்கு எதிராக மிகக் கடுமையான போராட்டத்தைத் தெருவில் இறங்கி நடத்தினார். அதேபோல் தெருவில் இறங்கிப் போராடுவதற்கு தொண்டர்களாகிய மக்களைத் தயார் படுத்த வேண்டும். மக்களாட்சி மாண்புக்கு எதிரானவைகளைக் கண்டித்து மக்கள் திரள் தெருவிற்கு வர வேண்டும். தொடர்ச்சியாக (Consistent) போராட்டங்கள் நடத்தப்பட வேண்டும்.

ஒரு போராட்டத்தின் வெற்றியின் மூலம் நாம் சிறிது தூரமே பயணிக்கிறோம். இந்த வெற்றியை அடிப்படையாகக் கொண்டு, இலக்கை அடையும் வரை நாம் தொடர்ந்து போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

42ஆவது சட்டத் திருத்தத்தின் மூலம் 1976இல் கல்வி மாநிலப் பட்டியலில் இருந்து ஒத்திசைவுப் பட்டியலுக்குக் கொண்டு செல்லப்பட்டது. இந்த 50 ஆண்டுகளில் நாம் “மாநிலப் பட்டியலுக்கு மீண்டும் கல்வி” என்பதை எந்த அளவிற்கு மக்களிடம் கொண்டு சேர்த்து இருக்கிறோம் என்ற சுய விமர்சனத்தோடு நாம் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

நேர்காணல்: **மா.உதயகுமார்**

# இதழியல் முன்னோடி பெரியார்

நூல் அறிமுகம்


**வெற்றிச்செல்வன்**

தந்தை பெரியார் தொடங்கிய 'விடுதலை' நாளிதழ் 88-வது ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கும் இந்த வேளையில், பெரியாரின் இதழியல் பணிகள் குறித்த நூலை அறிமுகப்படுத்துவது மிகவும் பொருத்தமாக இருக்கும் என்றே கருதுகிறேன்.

தந்தை பெரியாரின் 142-வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழ்ச் சமூகத்திற்காகப் பல்வேறு துறைகளில் பெரியார் ஆற்றிய பங்களிப்பை வெளிக்கொணரும் முயற்சியாக, 'பெரியாரின் பன்முக ஆளுமை' என்ற தலைப்பில், பல்வேறு துறைசார்ந்த ஆளுமைகளைக் கொண்டு, மே பதினேழு இயக்கம் 2020-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் தொடர் இணையவழிக் கருத்தரங்கை ஏற்பாடு செய்து நடத்தியது.

அந்தக் கருத்தரங்கில், 'பெரியார் இதழியல் முன்னோடி' என்ற தலைப்பில் திராவிடர் கழகப் பிரச்சாரச் செயலாளர், வழக்கறிஞர் அருள்மொழி அவர்கள் ஆற்றிய உரையை நிமிர் பதிப்பகம் தற்போது நூலாகக் கொண்டுவந்துள்ளது.

"நம் நாட்டில் தமிழர்களில் எத்தனையோ யோக்கியர்கள், விவேகிகள், கெட்டிக்காரர்கள் இருந்தாலும் அவர்கள் பொது ஜனங்களுக்குத் தெரியக் கூடாதவராய் இருக்கிறார்கள். இதன் காரணம் தமிழர்களுக்கு செல்வாக்கும் சக்தியுமுள்ள பத்திரிகையில்லை. மகாத்மா காந்திக்கே தமிழ்நாட்டில் தமிழர் யோக்கியதை தெரிய வேண்டுமானால் ஒரு பிராமணனைக் கொண்டோ ஒரு பிராமணப் பத்திரிகையைக் கொண்டோதான் தெரிந்து கொள்ள வேண்டும்..... தமிழர்களின் யோக்கியதை தமிழ்நாட்டினருக்குத் தெரியவேண்டுமானால் பிராமணப் பத்திரிக்கையின் மூலமாகத்தான் அறிய வேண்டியிருக்கிறது. இதைவிடத் தமிழர்களுக்கு வேறு இழிவு வேண்டியதே இல்லை. 100-க்கு 90-க்கு மேற்பட்ட ஜனத்தொகையுள்ள கூட்டத்தாருக்கு தங்கள் நாட்டில் தங்களைப் பற்றி தங்கள் சமூகத்தாரே அறிந்து கொள்ள ஒரு சாதனம் இல்லை என்றால் இதைப் பற்றி என்ன நினைப்பது?" என்று தமிழருக்கென்று பத்திரிகை தொடங்குவதன் அவசியத்தைக் குடிஅரசு இதழைத் தொடங்கும்போதே பதிவு செய்தவர் தந்தை பெரியார் (குடிஅரசு, 02.08.1925).




> "அக்காலத்தில் பிற்போக்குத்தனமான சனாதனக் கருத்துகளைத் தாங்கி வந்த சுதேசமித்திரன் உள்ளிட்ட இதழ்களுக்குப் பெரியார் எத்தகைய எதிர்வினை ஆற்றினார் என்ற செய்தியைச் சுருக்கமாகப் பதிவு செய்திருப்பதோடு, இதழ் நடத்துவதில் பெரியார் எதிர்கொண்ட சிக்கல்களையும் கோடிட்டுக் காட்டியுள்ளது இந்நூலின் சிறப்பான பகுதி."

இதழியல் ஆர்வலர்களுக்குப் பெரியார் வழங்கும் அறிவுரையைத் தொட்டுக் காட்டுகிறது இந்நூல். "நேர்மையாக, நினைத்ததைச் சொல்ல வேண்டும். மக்கள் அதை ஏற்றுக் கொள்கிறார்களோ இல்லையோ, இன்றைக்கு இல்லை என்றாலும் நாளைக்கு அதை ஏற்றுக் கொள்கிற நிலை வரும்" என்பதே அந்த அறிவுரை.

பாரதிதாசன், சிங்காரவேலர், ஜீவா போன்ற பெரும் ஆளுமைகள் பெரியார் நடத்திய இதழில் கவிதை, கட்டுரை வடிவில் தங்களது கருத்துகளைப் பதிவு செய்துள்ளனர். இதில் கவனிக்கத்தக்க முக்கியமான செய்தி, மூவலூர் இராமாமிர்தம் அம்மையார், குஞ்சிதம் அம்மையார், சிவகாமி (சிதம்பரனார்) அம்மையார், முத்துலட்சுமி அம்மையார் உள்ளிட்ட பல பெண்கள் தங்களுடைய கருத்தை வெளிப்படுத்துவதற்கான களமாகத் தன்னுடைய இதழ்களைப் பயன்படுத்தியவர் பெரியார்.

அக்காலத்தில் பிற்போக்குத்தனமான சனாதனக் கருத்துகளைத் தாங்கி வந்த சுதேசமித்திரன் உள்ளிட்ட இதழ்களுக்குப் பெரியார் எத்தகைய எதிர்வினை ஆற்றினார் என்ற செய்தியைச் சுருக்கமாகப் பதிவு செய்திருப்பதோடு, இதழ் நடத்துவதில் பெரியார் எதிர்கொண்ட சிக்கல்களையும் கோடிட்டுக் காட்டியுள்ளது இந்நூலின் சிறப்பான பகுதி.

பெண்கள் எழுதிய நூல்களும் அரசால் தடை செய்யப்பட்டுள்ளன என்பது இந்நூலின் மூலமாக நாம் அறிந்து கொள்ளும் புதிய செய்தி.

பல்வேறு வரலாற்றுக் குறிப்புகள் நிறைந்துள்ள இந்நூல், பெரியாரின் இதழியல் ஆளுமையைப் பல்வேறு கோணங்களில் அணுகுகிறது. பெரியாரின் மற்றொரு பரிமாணத்தை அறிந்து கொள்ள, அனைவரும் வாசிக்க வேண்டிய நூல் இது.

**இதழியல் முன்னோடி பெரியார்**

**ஆசிரியர் : வழக்கறிஞர் அருள்மொழி.**

**வெளியீடு : நிமிர் பதிப்பகம்**

**விலை : ரூ. 40**

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian